உ

கடவுள் துணை.

தொட்டிக்கலை

ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர்

இயற்றிய

# கலைசைச் சிலேடைவெண்பா.

இது,

திருவாவடுதுறை யாதீனவித்வானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களெழுதிய

குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கப்பிரசுரம்—௧௫.

மூன்றாம் பதிப்பு.

தமிழ்ச்சங்க முத்திராசாலை

மதுரை.

பவ௵ ஐப்பசி௴

1934.

உ

கடவுள் துணை.

# கலைசைச் சிலேடை வெண்பா.

## காப்பு.

கார்மருவுஞ் சோலைக் கலைசைச் சிலேடைவெண்பாச்
சீர்மருவக் கூறுந் திறம்வருமே—ஏர்மருவும்
கோதறுமுத் தோடைக் குளத்திருதாட் செங்கழுநீர்ப்
போதகமென் போதகத்தாம் போது.

## குறிப்புரை.

சிலேடைவெண்பா–இரண்டுபொருளைத்தருகின்ற வெண்பா. கோது அறு முத்து ஓடைக் குளத்து இருதாள் செங்கழுநீர்ப் போதகம்–குற்றமற்ற முத்துக்களைப்பதித்த பட்டமணிந்த நெற்றியையும், இரண்டு பாதத்தையுமுடைய செங்கழுநீர்யானையாகிய விநாயகக்கடவுள். என் போது அகத்து ஆம் போது–என்னுடைய பூவையொத்த மனத்தில்வந்து தோன்றுங் காலம். (க)

வட்டிக் கலைநீர் வடித்தமைப்போர் மன்னுதிருத்
தொட்டிக் கலைவெண்பாச் சொன்மாலை—கட்டிடமெய்ச்
செங்கழுநீ ராம்பலிரு செந்தா மரைமலரும்
தங்கிடுமென் னெஞ்சகத்தே தான்.

இக்கு அலை நீர் வடித்து வட்டு அமைப்போர் மன்னு–கரும்பை அலைத்தெடுத்த நீரைத் தெளித்து வட்டாக அமையச்செய்பவர்கள் நிலைபெற்றிருக்கின்ற. செஞ்கழுநீர் ஆம்பல்–செங்கழுநீர்யானையாகிய விநாயகக்கடவுள். மலர் என்றது பாதத்தை, மாலைகட்டிடச் செங்கழுநீர்மலர், ஆம்பன்மலர், செந்தாமரைமலர் என் னெஞ்சகத்துத் தங்கிடும் என வேறு மொரு பொருளுண்மை காண்க.

## நூல்.

நீருலவும் பூமகளும் நெட்டகழின் வார்புனலும்
காருணிய மீதூர் கலைசையே—ஏருலவும்
தண்டாங்க மாலையார் தாங்குமுடி யார்வரைக்கோ
தண்டாங்க மாலையார் சார்பு.

காருணியம் மீதூர்—கிருபை அதிகரிக்கின்ற; கார் உணிய மீதூர்—மேகமானது உண்ணும்பொருட்டு நெருங்குகின்ற. மீதூர்தல் ஈண்டு நெருங்கல். தமிழ்ச்சொல்லகராதியிற் காண்க. தண்டு அரங்கம் மால் ஐ—தண்டாயுதத்தையுடைய திருவரங்கத்திலெழுந்தருளியுள்ள மாலுக்குத் தலைவர். ஆர்—ஆத்திமாலை. வரைக் கோதண்டர்—மலையை வில்லாகவுடையவர். அங்கமாலையார்—என்புமாலையுடையவர். (க)

மாதராணி குங்குமமும் வாளேந்து கையினரும்
காதமருக் கூருங் கலைசையே—போதலரும்
அங்கொன்றைத் தாரா ரறிந்து தமைப் போற்றுதார்க்
கங்கொன்றைத் தாரா ரகம்.

காதம் மருக் கூரும்—காததூரம் வாசனை மிகுகின்ற. காது அமருக்கு ஊரும்—கொலைசெய்கின்ற போருக்குச் செல்லுகின்ற. அம்—அழகு. அங்கு—அவ்விடம். ஒன்று—ஏகமாகிய வீடு. (உ)

வாஞ்சைதரும்பைங்கிளியும்மாங்குயில்போல்வார்த்தையரும்
காஞ்சியிடை யார்க்குங் கலைசையே—ஆஞ்சலத்தால்
வெற்றிமதிக் கண்ணியான் வீயாம லாண்டவருள்
வெற்றிமதிக் கண்ணியான் வீடு.

வாஞ்சை—விருப்பம். காஞ்சியிடை ஆர்க்கும்—காஞ்சிமரத்திலிருந் தாரவாரிக்கும்; காஞ்சி இடை ஆர்க்கும்—எண்கோவைமணிவடத்தை இடையிற்கட்டும். வெற்று இ மதிக்கு அண்ணி—வெறுமையான இம் மதியை அடைந்து. வீயாமல்—கெடாமல், மதிக்கண்ணி—சந்திரனாகிய மாலை. (ந.)

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழுங் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தா னரனொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தா னகம்.

காவலரைச் சூழும்—அரசரைச் சுற்றியிருக்கும்; கா அலரைச் சூழும்—சோலையிலுள்ள பூவை ஆராயும். ஆராய்தலாவது இம்மலர் தேன் உண்ணுவதற்காம்; இம்மலர் தேன் உண்ணுவதற் காகாது என ஆய்தலாம். அரிவை அம்பு ஆக—திருமாலைக் கூரிய பாணமாக. அரிவை—உமாதேவியாகிய பெண்ணை. (௪)

இச்சைமட வார்தனமும் ஈட்டறத்தி னோர்தனமும்
கச்சங் கடக்குங் கலைசையே—மெச்சிவட
ஆலமருந் தண்ண லறுகணிவோன் வந்தெழுந்த
ஆலமருந் தண்ண லகம்.

கச்சு அங்கு அடக்கும்—கச்சினை அங்கே அடக்கும்; கச்சம் கடக்கும்—அளவைக் கடந்திருக்கும். தண் நல் அறுகு அணிவோன்—குளிர்ச்சியையுடைய நல்ல அறுகம்புல்லைச் சூடியவன். ஆலம்—விடம். (௫)

நாவலர்தம் புத்திரரும் நண்ணும் பிரமரமும்
காவியங்க ளாயுங் கலைசையே—தூவெள்ளைக்
கோட்டுக் குழையார் கொழுங்கயற்கண் மெல்லியலாம்
கோட்டுக் குழையார் குடி.

பிரமரம்—வண்டு. காவியங்கள் ஆயும்—காப்பியங்களை ஆராய்ச்சிசெய்யும்; காவி அம் கள் ஆயும்—நீலோற்பலத்தின் அழகிய தேனைத் தெரிந்தெடுக்கும்; ஈண்டு ஆய்தல் தெரிந்தெடுத்தல். தூ வெள்ளைக் கோட்டுக் குழையார்-சுத்தமாகிய வெள்ளிய சங்கக்குண்டலத்தையுடையவர். கோட்டுக்கு—கொம்பாகிய பெண்ணுக்கு. உழையார்—பக்கத்திருப்பவர். (௬)

தண்ணார் பொழிற்கரும்பும் தத்தைமொழி யார்கதுப்பும்
கண்ணாடி வீழுங் கலைசையே—ஒண்ணாறும்
வான்முத் தலைவேலை மைக்கடுவுண் டோன்கரத்தில்
வான்முத் தலைவேலை வாழ்வு.

கள் நாடி வீழும்—தேனைத் தேடி மலரில் வீழும்; கண்ணாடி வீழும்—(கதுப்பைக் கண்டோர்) கண்ணாடியைப்போல விரும்பும். கதுப்பு—கன்னம். ஒண்மை நாறும் வால் முத்து அலை வேலை மை கடு—மிகுதியாகத்தோன்றும் வெள்ளியமுத்தையும் அலையையுமுடைய கடலிலுண்டாகிய கரிய விடம்; வான் முத்தலை வேல் ஐ—பெரிய மூன்று தலைகளையுடைய சூலந்தாங்கிய கடவுள். (எ)

பொற்புரிசை நீள்கொடியும் போர்வபவர் திண்புயமும்
கற்பகமே லோங்குங் கலைசையே—எற்புருக
நந்தாண்ட வத்த னளினத்தன் வீழ்ந்திறைஞ்சும்
நந்தாண்ட வத்த னகர்.

கற்பகம் மேல் ஒங்கும்—கற்பகத்தின்மீது உயர்ச்சியுற்றிருக்கும்; கல் பக மேல் ஓங்கும்—கல்லும் பிளவுபட மேன்மையொடு வளரும். நந்து ஆண்ட அத்தன்—சங்கை ஆட்சிகொண்ட கையையுடையவனுகிய திருமால். தாண்ட வத்தன்—நடனத்தையுடையவன். (அ)

சிந்து மதமாவும் தேனுகர்மா வும்பூவிற்
கந்தங் கலைக்குங் கலைசையே—தந்தாட்
குருக்கங் கணத்திஞ னுற்றிடச்செய் தோன்பாம்
புருக்கங் கணத்திஞ னூர்.

பூவில் கந்து அங்கு அலைக்கும்—பூமியில் நாட்டிய கட்டுத்தறியை அங்கே அசைக்கும்; பூவில் கந்தம் கலைக்கும்—பூவிலிருக்கின்ற வாசனையைக் கலைத்து விடும். உருக்கம் கணத்தில் நான் உற்றிட—அன்பைக் கணப்பொழுதில் யான் அடையும்படி. பாம்பு உரு கங்கணத்தினன்—பாம்பாகிய அழகிய கடகத்தையுடையான். (௯)

வள்ளமுலை யார்விழியும் மைக்கா மதுகாமும்
கள்ளம் பயிலுங் கலைசையே—உள்ளவலம்
போகத் திருந்தார் புரமெரித்தார் தேவியொடும்
போகத் திருந்தார் புரம்.

வள்ளம்—கிண்ணம். கள்ளம் பயிலும்—களவினைப் பழகும்; கள் அம்பு அயிலும்—கள்ளாகிய நீரை உண்ணும். வலம் போக—வலிமை கெட. திருந்தார்—பகைவர். (௧0)

வான்மிசையே றும்பொழிலும் மானுர் குழலுமலர்க்
கான்மணந்து வக்குங் கலைசையே—மேன்மைதரும்
பாலத் திருக்கழலார் பண்டிருவர்க் காடியகா
பாலத் திருக்கழலார் பற்று

மலர் கான்மணம் துவக்கும்—மலரில் மிக்க வாசனை (வீசத்) தொடங்கும்; மலர் கால் மணந்து உவக்கும்—பூவுக்கிடமாகக் கலந்து மகிழப்பெறும். பாலம் திருக்கு அழலார்—நெற்றிக்கண் அக்கினியாகவுடையவர். இருவர்—பதஞ்சலிமுனிவர் வியாக்கிரபாதமுனிவர். காபாலம் திரு கழலார்—காபாலமென்னுங் கூத்தைச்செய்கின்ற சிறப்புள்ள பாதத்தையுடையவர். (௧௧)

பாயாத மானுரைம் பாலும் பசுந்தோளும்
காயாவே யொக்குங் கலைசையே—வய்புலித்தோல்
அம்பாவ ஞரை னணிவலைகொண் டங்கொருநாள்
அம்பாவ ஞரை னகம்.

ஐம்பால்—ஐந்துபகுப்பாக முடிக்கப்படுங் கூந்தல். காயா வே ஒக்கும்—காயாம் பூவையே ஒத்திருக்கும்; காயா வேய் ஒக்கும்—பச்சைமூங்கிலைப்போலப் பொருந்தும். புலித்தோல் அம்பரவன்—புலியின்றோலை ஆடையாகவுள்ளவன். ஆனன்—இடபவாகனத்தான். அம் பாவனானன்—அழகிய வலைஞானவன். வலைஞான கதை திருவிளையாடற்புராணம் வலைவீசிய படலத்தில் அறிக. ()

சேலார் செழுந்தடத்திற் செந்தா மரையினிற்றேன்
காலாறு பாயுங் கலைசையே—சூலேறு
பாணியார் வேணியார் பாகீ ரதியென்னும்
பாணியார் வேணியார் பற்று.

தேன் கால் ஆறு பாயும்—தேனானது வாய்க்காலின்வழியாகப் பாயும்; தேன்காலாறு பாயும்—ஆறுகாலுடைய வண்டுகள் குதிக்கும். சூல் ஏறு பாணியார்—சூலாயுதமிவர்ந்திருக்கின்ற கையையுடையவர். வேணி ஆர்—ஆகாயத்திற்பொருந்திய. பாகீரதி—கங்கை. பாணி ஆர் வேணியார்—நீரையும் ஆத்திப்பூவையுமணிந்த சடையையுடையவர். (கஙு)

தாமரைவண் டும்குளமும் சார்விரகத் தாரிடமும்
காமரம்பா டுஞ்சீர்க் கலைசையே—மாமதமா
தங்க முரித்தார் தடங்கேழற் கோட்டினைச்சூர்
தங்க முரித்தார் தலம்.

காமரம் பாடும்—இசையைப் பாடும். சீகாமரம் என்பதில் முதல் குறைந்து நின்றதெனினு மாம். சீகாமரம்-ஓர்பண். காமர் அம்பு ஆடும்—அழகிய நீர் அசையும்; காமர் அம்பு ஆடும்—மன்மதபாணம் வெற்றிகொள்ளும். கேழல் கோட்டினை—திருமாலாகிய பன்றியின்கொம்பை. சூர் தங்க முரித்தார்—அச்சந்தங்க முரித்தவர். முன்னிரண்டடியில் முப்பொருள்வருதல் காண்க. (கச)

மண்டமர்செய் யுங்களமும் வான்கரும்பை மள்ளருஞ்சேர்
கண்டகரச் சாடுங் கலைசையே—தொண்டர்
கணிச்சித் திருக்கையான் காதரத்தைத் தீர்க்கும்
கணிச்சித் திருக்கையான் காப்பு.

கண்டகர் அச்சு ஆடும்—வாளுடையராகிய வீரர்களின் சரீரம் ஆடும்; கண் தகரச் சாடும்—கணுக்கள் தகரும்படி முரிக்கும். தொண்டர்கண் இச்சித்து இருக்கையான்—அடியாரிடத்து விரும்பியிருத்தலையுடையான். காதரம்—துன்பம். கணிச்சி—மழுவாயுதம். (கரு)

தொண்டைக் கனிவாயார் சொல்லும் நயனமுந்தேன்
கண்டவியப் பண்ணுங் கலைசையே—தண்டமிழ்சேர்
வண்டணிகைச் சத்தியத்தன் வாரணத்த னத்தனித்தன்
வண்டணிகைச் சத்தியத்தன் வாழ்வு.

தேன் கண்டு அவியப்பண்ணும்—தேனையுங் கற்கண்டையுங்கெடச்செய்யும்; தேன் கண்ட வியப்பு அண்ணும்—வண்டைக்கண்ட வியப்பைப் பொருந்தும். வண் தணிகைச் சத்தி அத்தன்—வளம்பொருந்திய திருத்தணிகைமலையிலிருக்கும் வேற்கரனாகிய முருகனுக்கும், வாரணத்தன் அத்தன்—யானைமுகனாகியவிநாயகனுக்கும் தந்தையானவன். வண்டு அணி கைச் சத்தி அத்தன்—வளையலையணிந்த கையையுடைய உமாதேவியைப் பாதியிலுள்ளவன். (கசு)

பன்மறைதேர் பூசுரரும் பாறுதலில் வாழ்க்கையரும்
கன்மந் திரஞ்செய் கலைசையே—மூன்மதனார்
ஐயம் புதையா ரறிவகல வென்னுளத்தில்
ஐயம் புதையா ரகம்.

பாறுதல் இல் வாழ்க்கையர்—கெடுதலில்லாத செல்வத்தினர். கன்மம் திரம் செய் - கிரியைகளை நிலையாகச்செய்கின்ற; கல் மந்திரம் செய்—கல்வீடுகளைச் செய்கின்ற. ஐ அம்பு—பஞ்சபாணம். ஐயம் புதையார்—சந்தேகத்தைப் புதைத்து வையார். (கஎ)

வல்லா ரிளமுலையார் வாள்விழியும் நீள்வயலும்
கல்லாரங் காட்டுங் கலைசையே—பொல்லாக்கா
மத்தகத்திற் கண்ணார் மருவு வதற்கண்ணார்
மத்தகத்திற் கண்ணார் மனை.

வல்—சூதாடுகருவி. கல்லார் அங்கு ஆட்டும்—கல்லாதவரை அங்கே அலைக்கும்; கல்லாரம் காட்டும்—நீலோற்பலமலரைத் தோற்றுவிக்கும். காமத்து அகத்தில் கண்ணார் மருவுவதற்கு அண்ணார்—காமத்தினிடத்திற் கருதுதலுடையார்சேர்வதற்குப்பொருந்ாதவர். மத்தகத்திற்கண்ணார்—நெற்றியிற் கண்ணுடையவர்.()

கொந்துகுழற் கோல்வளையார் கொங்கையுநற் பாகருந்திண்
கந்துகத்தே ரோட்டுங் கலைசையே—சந்தணையும்
செப்பினகி லத்தார் செழுமனையில் வந்திரந்தோர்
செப்பினகி லத்தார்தஞ் சேர்வு.

கொந்து—பூங்கொத்து. கோல் வளை—வளைந்த வளையல். கந்துகத்து எர் ஓட்டும்—பந்தினது அழகை ஓடப்பண்ணும்; கந்துகம் தேர் ஓட்டும்—குதிரை

பூட்டிய தேரைச் செலுத்தும். சந்து—சந்தனம். செப்பின் நகிலத்தார்—செப்பினைப்போன்ற கொங்கையையுடையார். செப்பின் அகிலத்தார்—சொல்லின் எல்லாமுடையவர். (கக)

தேன்மருவும் பண்ணைகளுஞ் செல்வர் திருமனையும்
கான்மூளைகண் மாறாக் கலைசையே—வான்மே
விருப்பு வணத்தார்க ணேந்தடியார் காய்ந்த
விருப்பு வணத்தா ரிடம்.

கால் மூளைகள் மாறா—கால் என்று சொல்லப்படும் மூளைகள் நீங்காதிருக்கின்ற; கான்மூளைகள் மாறா—புத்திரர்கள் வேறாகாத. வான் மேவு இருப்பு உவணத்தார் கண் ஏந்து அடியார்—பெருமைபொருந்திய இருக்கை கருடனாகவுள்ள திருமால் கண்ணையேந்திய பாதத்தார். காய்ந்த இருப்பு வணத்தார்—தீயிற் காய்ந்த இரும்பின்வண்ணம்போலுஞ் சிவந்தநிறத்தார். (உ0)

மூத்துநகை யார்குழல்சேர் மொய்யளியும் வீரருநற்
கத்திகையிற் சுற்றுங் கலைசையே—மித்தையுறும்
வண்டருக்கப் பாலார் மறைப்பொருணால் வர்க்குரைத்த
வண்டருக்கப் பாலார் மனை.

கத்திகையில் சுற்றும்—மாலையிற் சூழும்; கத்தி கையில் சுற்றும்—வாளைக் கையில்வைத்துச் சுழற்றும். மித்தை உறும் வண்டருக்கு அப்பாலார்—அஞ்ஞானம் பொருந்தும் மிண்டருக்கு எட்டாதவர். நால்வர்—சனகாதிமுனிவர். வண் தருக்கப்பாலார்—வலிய தருக்கப்பகுதியையுடையார். வண் தரு கப்பு ஆல் ஆர்—வளம்பொருந்திய தருவாகிய கிளைகளையுடைய ஆலுடையவர். உரைத்த என்பதற்கு உரைக்கப்பெற்ற எனப் பொருள்கொள்க. (உக)

திக்குலவுங் கண்ணாரும் சித்திரயாழ் வல்லோரும்
கைக்கிளைபா ராட்டுங் கலைசையே—மிக்க
திருமாதங் கத்துரியார் சொம்பொனக மீன்ற
திருமாதங் கத்துரியார் சேர்வு.

கைக் கிள்ளை பாராட்டும்—கையிற் கிளியை வைத்துக் கொண்டாடும்; கைக்கிளை பாராட்டும்—கைக்கிளையென்னும் இசையைப் பலகாற் சொல்லும். மிக்கு அதிரும் மாதங்கத்து உரியார்—அதிகமாக முழங்கும் யானைத்தோலையுடையவர். திருமாது அங்கத்து உரியார்—அழகிய உமாதேவியாகியபெண்ணைச் சரீரத்தில் உரிமையாக வுள்ளவர். (உஉ)

அச்சர் னகியனையா ரங்கைகளும் கொங்கைகளும்
கச்சூர முந்துங் கலைசையே—நச்சாரக்
கண்டங் கறுத்தார் காத்தைத்தீ யின்செருக்கைக்
கண்டங் கறுத்தார்தங் காப்பு

கச்சூரம் உந்தும்—கழங்கை விளையாடச் செலுத்தும். கச்சு ஊர முந்தும்—கச்சானது புடைபெயர மேற்படும். தீயின்செருக்கைக் கண்டு காத்தை அங்கு அறுத்தார்—அக்கினியின் செருக்கைப் பார்த்துக் கையை அங்கே அறுத்தவர். அக்கினியின்கையை அறுத்தது தக்கன்யாகத்திலெனக. (உ௩)

வம்பலர்தார் வேந்தர் மதகரியும் வாவிகளும்
கம்பலையோ டூருங் கலைசையே—செம்பதுமத்
தானத்தன் ஞானத்தன் றங்கட் கிறைவனுசாத்
தானத்தன் றானத்தன் சார்பு.

கம்பலையோடு ஊரும்—முழக்கத்துடன் செல்லும்; கம்பு அலையோடு ஊரும்—சங்குகள் திரைகளுடன் தவழும். பதுமத்தான்—பிரமன். நத்தன்—திருமால். தானத்தன்—சுவர்க்கத்தையுடைய இந்திரன். உசாத்தானத்தன்—திருவுசாத்தானமென்னுந் தலத்தன், தான் அத்தன்—தானே தலைவனுயுள்ளவன். (உ௪)

வேம்பாகி னீன்மொழியார் மென்றோளும் செவ்விதழும்
காம்பீர மல்குங் கலைசையே—பாம்பார்
அகலத்தா னுண்டான்பெண் ணாணென் மம்மர்
அகலத்தா னுண்டா னகம்.

காம்பு ஈர மல்கும்—மூங்கிலைப் பிளக்க நிறைந்திருக்கும்; காம்பீரம் அல்கும்—முருக்கம்பூவைப்போலத் தங்கும், காம்பிரம்—முருக்கு. ஈண்டுக் காம்பீரமென நடுக்குறில் நீண்டுநின்றதெனக. அகலம்—மார்பு. ஆண்தான் பெண்ஆணன்—ஆண்பெண்ணானவன். தான்—அசை. மம்மர்—மயக்கம். அகல—நீங்க. தான் ஆண்டான்—தானே வந்து ஆட்கொண்டவன். (உ௫)

மான்றமட வார்குழலும் வண்டாளஞ் சங்கினமும்
கான்றங் கிவருங் கலைசையே—தேன்றங்
கருக்கங் கணியா ரறிவுடைமை யார்மெய்
யருக்கங் கணியா ரகம்.

கான் தங்கி வரும்—வாசனை தங்கப்பெற்று வளரும். வருதல்—வளருதல். தாளம் கான்று அங்கு இவரும்—முத்தைக் கக்கி அங்கே உலாவும். இவர்தல்—

உலாவுதல். அருக்கம் கணியார் - எருக்கம்பூமாலையையுடையவர். அணியார் - கிட்டினவர். (உசு)

புண்ணியமெய்ப் பண்ணவரும் பொன்னனையார் பூங்குழலுங்
கண்ணிவா சஞ்செய் கலைசையே—எண்ணியொரு
மன்னாக மத்தினன் வாரிகடைந் தோர்க்கிரங்கு
மன்னாக மத்தினன் வாழ்வு.

கண்ணி வாசஞ் செய்-கருதி வசித்தல்செய்கின்ற. கண்ணி வாசஞ் செய்-மாலை வாசனைசெய்கின்ற. மல்நாகம்மத்தினன்-வலிய மந்தரமலையாகிய மத்தினாலே. மன்-தலைவன். ஆகமத்தினன்-ஆகமநூலருளியவன். (உஎ)

சிந்துமதுப் பூங்காவிற் செவ்வீதி யிற்றும்பி
கந்தருவந் தேரூர் கலைசையே—உந்தி
கலசத்த னத்தியத்தன் காஞ்சனவெற் பீன்ற
கலசத்த னத்தியத்தன் காப்பு.

தும்பி கந்தருவம் தேர் ஊர்-வண்டுகள் இசைப்பாட்டைத்தேர்தல்மேற்படுகின்ற. தும்பி கந்தருவம் தேர் ஊர்-யானைகளையுங் குதிரைகளையுந் தேர்களையுஞ் செலுத்துகின்ற. உந்து இகல் அசத்தன் அத்தி அத்தன்-செலுத்துகின்ற வலிமைபொருந்திய ஆட்டுவாகனத்தையுடைய முருகனுக்கும், யானையாகிய விநாயகனுக்கும் தந்தை. காஞ்சனம்-பொன். கலசம் தனத்தி அத்தன்-கலசம் போன்ற தனத்தையுடைய உமாதேவியைப் பாதியிலுள்ளவன். (உஅ)

ஒண்டொடியார் வாய்மொழியு மூண்மைப் புகழுநவ
கண்டங் கடக்குங் கலைசையே—மண்டு
மருத்தருந்தும் பையரவர் வார்சடைமேல் வைத்த
மருத்தருந்தும் பையரவர் வாழ்வு.

நவம் கண்டு அங்கு அடக்கும்-புதுமையுடைய கற்கண்டை அங்கே அடக்கிவிடும். நவம் கண்டம் கடக்கும்-ஒன்பதுகண்டங்களைக் கடந்துசெல்லும். மருத்து அருந்தும் பை அரவர்-காற்றையுண்ணும் படவரவினையணிந்தவர். மரு தரும் தும்பையர்-வாசனையைத்தரும் தும்பைமாலையையணிந்தவர். (உகூ)

தண்ணார் வயற்கரும்புந் தத்துவந்தே ரந்தணருங்
கண்ணாஞ் சிந்துங் கலைசையே—விண்ணாடும்
ஐயரவா விட்டா ரகத்தார்நற் குண்டலங்கள்
ஐயரவா விட்டா ரகம்.

கண் ஆரம் சிந்தும்-கணுக்களினின்றும் முத்துக்களைச் சிதறும். தத்துவம்-உண்மைப்பொருள். கண் நாரம் சிந்தும்-கண்களால் ஆனந்தநீரைச் சொரியும். ஐ அரவு ஆ இட்டார்-அழகிய அரவாக அணிந்தவர். (௩௦)

நிட்டையுறு சிட்டருஞ்செய் நீலங் கடைசியருங்
கட்டங் கழிக்குங் கலைசையே—வட்டக்
குடிலச் சடையார் கொடியேனைப் பீறற்
குடிலச் சடையார் குடி.

கட்டம் கழிக்கும்-வருத்தத்தை நீக்கும். நீலம் கட்டு அங்கு அழிக்கும்-நீலப்பூவைக் களைந்து அங்கே கெடுக்கும். குடிலம் சடையார்-வளைவான சடையையுடையவர். பீறல் குடில் அச்சு அடையார்-கிழிதலையுடைய குடிலாகியவுடம்பில் இனிப் பொருத்தார். (௩௧)

கொஞ்சுகிளி யன்னார் குவிமுலையுங் கன்னுவருங்
கஞ்சமுருக் கும்பூங் கலைசையே—வஞ்சமனக்
கைய ரவப்பணியார் கண்ணுமனத் துக்கரியார்
கைய ரவப்பணியார் காப்பு.

கஞ்சம் முருக்கும்-தாமரையைக் கெடுக்கும். கன்னுவர்-கன்னர். கஞ்சம் உருக்கும்-வெண்கலத்தை உருகச்செய்யும், கையர் அவப்பணியார் கண்ணும்-கீழோராகிய அவத்தொழிலோர் கருதுகின்ற. கை அரவப்பணியார்-கையில் அரவாபரணத்தையுடையவர். (௩௨)

சீலமுறு மன்னவருஞ் செங்கழுநீர்ப் போதலருங்
காலமளி யேறுங் கலைசையே—மாலில்
வருந்தப் படையார் மனத்தா ரினுநான்
வருந்தப் படையார் மனை.

கால் அமளி ஏறும்-கால்களையுடைய படுக்கையில் ஏறியிருக்கும். காலம் அளி ஏறும்-தேனையுண்ணுதற்குரியகாலத்தில் வண்டுகள் உட்செல்லப்பெறும். மாலில் வரும் தப்பு அடையார் மனத்தார்-மயக்கத்தால்வரும் தவற்றினைப் பொருந்தாதவர்கள் மனத்திலிருப்பவர். (௩௩)

நற்புலவர் செய்யுளுநன் ஞரியர்கள் வெண்ணகையுங்
கற்பனைய வென்னுங் கலைசையே—பொற்பார்
சலசத்தா னந்தனுப்பர் சாரா தவசஞ்
சலசத்தா னந்தன் றலம்.

கற்பனைய-வருணனையையுடையன. கற்பு அனைய-முல்லையரும்பை ஒத்திருக்கின்றன. சலசத்தான்-பிரமன். நந்தன்-திருமால். அசஞ்சல சத்து ஆனந்தன்-சஞ்சலமில்லாத உண்மையானந்தன். (௩௪)

அன்னநடை யார்மொழியு மாடவர்க டிண்டோளுங்
கன்னலம்போ லாருங் கலைசையே—சென்னியிடை
வாரம் படைத்தார் வளர்சிதம்ப ரேசருமை
வாரம் படைத்தார் மனை.

கன்னல் அம்-கரும்பின் நீர். கல் நலம்-கல்லின் நன்மை. வார் அம்பு அடைத்தார்-ஒழுகுகின்ற நீரைச் சேர்த்தவர். வாரம் படைத்தார்-அன்பைப் பெற்றுக்கொண்டவர். வாரம்-பங்காகிய பாதியெனவும் கூறுவர். (௩௫)

தேந்தா மரைஞிமிறுந் திண்வயவர் தூணிகளுங்
காந்தாரம் பாடுங் கலைசையே—மாந்த
வருங்கடுக்கை யான்வாங்கி மாந்தினன்றேன் றேங்க
வருங்கடுக்கை யான்வாழ் மனை.

காந்தாரம் பாடும்-காந்தாரமென்னும் பண்ணைப் பாடும். காந்து ஆர் அம்பு ஆடும்-சுடுதலார்ந்த அம்பு பொருந்தும். மாந்த-உலகத்தையுண்ண. வரும் கடுக்கையான் வாங்கி மாந்தினன்-வருகின்ற விடத்தைக் கையினால்வாங்கி யுண்டான். வரும் கடுக்கையான்-வளருங் கொன்றைமாலையையுடையான். (௩௬)

பொங்குசுதை மாளிகையும் போர்வீரர் வேற்றசையுங்
கங்குலவித் துய்க்குங் கலைசையே— எங்குநிறை
வையம் படைத்தான்கம் மாய்த்தாழித் தூணிபிற்றன்
வையம் படைத்தான் மனை.

கங்குல் அவித்து உய்க்கும்-இராவைக் கெடுத்தோட்டும். கங்கு உலவித் துய்க்கும்-பருந்துகள் உலாவிப் புசிக்கும். கம்-சிரசு. ஆழித் தூணி-பாற்கடலாகிய அம்பறாத்தூணி. வை அம்பு அடைத்தான்-கூர்மையையுடைய பாணத்தை அடைத்தவன். அம்பு-திருமாலாகிய அம்பெனக. (௩௭)

வேதியர்பொற் குண்டலமும் விண்ணு டையவருங்
காதலம ருஞ்சீர்க் கலைசையே—மாதனங்கள்
பந்தங் குலைக்குமம்மான் பாகத்தா னென்னிருண்ட
பந்தங் குலைக்குமம்மான் பற்று.

காது அலமரும்-செவியிற் சுழலும். காதல் அமரும்-விருப்புடன் தங்கும். பந்து அங்கு உலைக்கும் அம் மான்-பந்தை அங்கே யுலைக்கின்ற அழகுடைய மாணுகிய உமாதேவி. பந்தம் - பாசம். (ங௲அ)

பொற்கொடியார் செங்கையினிற் பூம்பழனச் சேற்றளையிற்
கற்கடக மூருங் கலைசையே—சற்குருவாய்
வந்தவலம் பாற்றினுர் வார்சடைமேல் விண்மேனி
வந்தவலம் பாற்றினுர் வாழ்வு.

கல் கடகம் ஊரும்-இரத்தினக்கற்கள்பதிக்கப்பெற்ற கங்கணம் ஏறியிருக்கும். கற்கடகம் ஊரும்-ஞெண்டுகள் தவழும். அவலம் பாற்றினுர்-மனக்கவலையை நீக்கினுர். நிவந்த அலம்பு ஆற்றினுர்-உயர்ந்த ஒலிக்கின்ற கங்காநதியையுடையவர். (ங௲கூ)

நீர்மண் டிலஞ்சிகளு நீண்ட திருக் கோபுரமுங்
காரண்டந் தோயுங் கலைசையே—வீரநர
பஞ்சா னனத்தான் பதைபதைக்கத் தான்பிளந்த
பஞ்சா னனத்தான் பதி.

இலஞ்சி-தடாகம். காரண்டம் தோயும்-நீர்க்காக்கை மூழ்கும். கார் அண்டம் தோயும்-கரிய ஆகாயத்தைப் பொருந்தும். நரபஞ்சானனத்தான் - நரசிங்க வடிவமான திருமால். பஞ்ச ஆனனத்தான்-ஐந்துமுகத்தையுடையவன். பஞ்சானனம்-விரிந்தமுகத்தையுடைய சிங்கம். (சo)

பொற்பூர் மடந்தையரும் போதகமன் ஞர்மார்புங்
கற்பூர நாறுங் கலைசையே—விற்போற்
கரும்புருவ மானுர்தங் காமுறுர் நெஞ்சிற்
கரும்புருவ மானுர்தங் காப்பு.

கற்பு ஊர நாறும்-கற்பு பரக்கத் தோன்றும். கற்பூரம் நாறும்-கற்பூரம் வாசிக்கும். கரும்புருவம் மானுர் காமுறுர் நெஞ்சில் - கரியபுருவத்தையுடைய மாதரிடத்து இச்சையுருதவர் மனத்தில். கரும்பு உருவமானுர் - கரும்புபோல இனிய வடிவமா யிருப்பவர். (சக)

மல்லுழவ ரேரிகட்டும் வாளுழவர் வாம்பரிக்குங்
கல்லணைகள் வைக்குங் கலைசையே—மூல்லைநல்லார்
மத்தி னடிக்குமெய்யன் மால்விடையாக் கொண்டவனீ
மத்தி னடிக்குமெய்யன் வாழ்வு.

கல் அணைகள் வைக்கும் - கல்லால் அணைகளை நியமிக்கும். கல்லணைகள் வைக்கும் - கல்லணைகளை எடுத்துவைக்கும். கல்லணை - குதிரைமேலிடுந்தவிசு. மத்தின் அடிக்கும் மெய்யன் மால் - தயிர்மத்தினால் அடிக்கப்பட்ட சரீரத்தனாகிய திருமாலை. ஈமத்தில் நடிக்கும் மெய்யன் - சுடலையில் நடனஞ்செய்யும் மெய்ப்பொருளாயினவன். (சஉ)

நம்புமடி யார்வினையு நல்லரசர் வீதிகளுங்
கம்பமா வோடுங் கலைசையே—சம்புவெள்ளிப்
பொற்பினா கத்தான் புகழ்ச்சிதம்ப ரேசனொரு
பொற்பினா கத்தான் புரம்.

கம்பம் ஆ ஓடும்-நடுக்கமாகக் கெடும். கம்பம் மா ஓடும்-கம்பத்திற் கட்டுதற்குரிய யானைகள் விரைந்தோடும். சம்பு - இன்பஞ்செய்தலாற் சம்புவென்னும் பெயரையுடையான். வெள்ளிப்பொற்பின் நாகத்தான் - வெள்ளியாகிய அழகிய மலையையுடையவன். பொன் பினாகத்தான் - பொன்னாகிய பினாகமென்னும் வில்லையுடையவன். (சங)

மாதரம்பொற் கொப்புகளும் வாயார் மதகுகளுங்
காதலையப் போடுங் கலைசையே—கோதில்
பாதத்து வந்தானென் பார்க்கருளி யென்றும்
பாதத்து வந்தான் பதி.

காது அலையப் போடும் - செவியில் அலையும்படி இடும். காது அலை அப்பு ஓடும்-(கரையை)அழிக்கின்ற திரையையுடைய நீரோடும். பரம் தத்துவம் தான் என்பார்க்கு-மேலான உண்மைப்பொருள் தானேயானென்பவர்க்கு. பரதத்து உவந்தான் - நடனத்தில் உவப்புற்றவன். (சச)

பட்டங்கொள் வேந்தர் பவனியின்மின் னாருரையிற்
கட்டியங்கூ றுஞ்சீர்க் கலைசையே—சிட்டருளத்
தன்பா னதியானத் தானந்த மாம்பெருமை
யன்பா னதியா னகம்.

கட்டியம் கூறும்-கட்டியஞ்சொல்லும். அரசர்புகழ்சொல்லுதற்குக் கட்டியங் கூறல் என்று பெயருண்டு. கட்டி அங்கு ஊறும்-வெல்லக்கட்டிரசம் அங்கே சுரக்கும். சிட்டர் உளத்து அன்பு ஆன தியானத்து ஆனந்தம் ஆம் பெருமையன்-உயர்ந்தோர் மனத்திலுள்ள அன்பாகிய தியானத்திடத்து ஆனந்தமாகத் தோன்றும் பெரியோன். பால் நதியான் - வெள்ளிய கங்காநதியையுடையவன். (சரு)

மாசில் வணிகரும்பூ வார்குழலின் மாதரும்பொற்
காசறையுட் கொட்டுங் கலைசையே—வீசுகையின்
மாசுணக்காப் பிட்டவரன் வண்ணத் திருவுருவின்
மாசுணக்காப் பிட்டவரன் வாழ்வு.

பொன் காசு அறை உள் கொட்டும் - பொற்காசுகளை அறைகளினுள்ளிடத்திற் குவிக்கும். குழலில் காசறை உள் கொட்டும் - கூந்தலில் மயிர்ச்சாந்தை உள்ளே அப்பும். கொட்டுதல் - குவித்தல், அப்புதல். மாசுணம் காப்பு இட்டவரன் - பாம்பாகிய கங்கணத்தைவைத்த மேலானவன். மா சுணம் காப்பு இட்ட அரன் - பெருமைதங்கிய பொடியாகிய வீபூதியையணிந்த அரனென்னுந் திருநாமமுடையவன். இடுதல்-வைத்தல், அணிதல். அரன்-உயிர்கட்குப் பாசத்தையரிப்பவன். (௬௬)

மன்னரணி மாளிகையு மாருக் கொடையினருங்
கன்னன்மணி யேயுங் கலைசையே—வன்னிமதி
என்பரவ மட்டா ரெருக்கணிவார் காமியா
என்பரவ மட்டா ரிடம்.

கல் நல் மணி ஏயும்-கல்லாகிய நல்லமணிகளால் இயைந்திருக்கும். கன்னன் மணி ஏயும்-கன்னனையுஞ் சிந்தாமணியையு மொத்திருக்கும். மாளிகை கன்னல் மணி ஏயும் எனக்கொண்டு மாளிகையில் நாழிகைமணி பொருந்துமெனவுங் கூறுவர். வன்னி மதி என்பு அரவம் மட்டு ஆர் எருக்கு அணிவார் - வன்னி பத்திரத்தையும் சந்திரனையும் எலும்பையும் பாம்பையும் தேன்பொருந்திய எருக்கமலரையும் தரித்தவர். காமியா என்பர் அவம் அட்டார் - காப்பாய் என்பவருடைய தீமையைக் கெடுத்தவர். மியா - முன்னிலையசை, (௬௭)

மைவாழ் மதிற்கிடங்கு மள்ளர் பெருங்குழுவுங்
கைவேழ மாடுங் கலைசையே—வைவாய்ந்த
கட்டங்கங் கையுடையார் காமருசீர்ச் செஞ்சடைமேற்
கட்டங்கங் கையுடையார் காப்பு.

மை - மேகம். கை வேழம் ஆடும் - கையையுடைய யானைகள் மூழ்கும். கை வேழம் ஆடும் - கையில் கரும்பு அசைந்திருக்கும். வை - கூர்மை. கட்டங்கம் கை உடையார் - மழுவைக் கையிலுடையவர். காமரு - அழகிய. உகரம் சாரியையென்க. கட்டு அம் கங்கை உடையார்-அடக்கிய அழகிய கங்காநதியை யழித்தல் செய்யாதவர். கட்டுதல் - அடக்குதல், தமிழ்ச்சொல்லகராதியிற் காண்க. (௬௮)

பொன்னிலகு பூந்தடமும் பொற்பிடை மங்கையருங்
கன்னிபரங் காடுங் கலைசையே—மன்னு
மலைவிலத்த ரன்பாய் மலைவிலத்த ரென்றும்
மலைவிலத்தர் வாழு மனை.

கன்னியர் அங்கு ஆடும்-மாதர்கள் அங்கே மூழ்கும். கன்னி அரங்கு ஆடும்-அழிவில்லாத சபையில் நடனஞ்செய்யும். மன்னும் மலைவில் அத்தர்-நிலைபெற்ற மலைவில்லைக் கையிலுடையவர். மலை விலத்தர்-அணிந்த வில்வத்தையுடையவர். மலைவு இல் அத்தர்-மலைவில்லாத பெரியோர். வில்லத்தர் விலத்தரென் விகாரமாயினது. (சக)

சுந்தரஞ்சேர் நந்தினமுந் தோகை மயிலுமின்னார்
கந்தரங்கண் டார்க்குங் கலைசையே—கொந்திதழிக்
கண்ணி யரிப்பார் கலங்குமுயிர்க் கஞ்ஞானக்
கண்ணி யரிப்பார்தங் காப்பு.

கந்தரம் கண்டு ஆர்க்கும்-கழுத்தைப் பார்த்து ஆரவாரிக்கும். மின் ஆர் கந்தரம் கண்டு ஆர்க்கும்-மின்னல்பொருந்திய மேகத்தைக்கண்டு ஆரவாரிக்கும். இதழிக் கண்ணியர்-கொன்றைமாலையார். அஞ்ஞானக் கண்ணி அரிப்பார்-அஞ்ஞானவலையைக் கெடுப்பார். (ருo)

செய்யதவத் தோருந் திரிமருப்புப் போர்த்தகருங்
கையடையா ருஞ்சீர்க் கலைசையே—வெய்யவிடத்
துத்திப்பாம் பாட்டினார் சொன்மூவர் தோத்திரஞ்செய்
தித்திப்பாம் பாட்டினார் சேர்வு.

கையடை ஆரும்-அடைக்கலத்தானமாகப் பொருந்தும். கை அடை ஆரும்-கையிலுள்ள இலையையுண்ணும். துத்திப் பாம்பு ஆட்டினார் - படப்பொறியையுடைய பாம்பை ஆட்டினவர். மூவர்-அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர். ()

சிற்பாணி யாடரங்குந் திண்புரிசைக் கேதனமுங்
கற்பமுற வாக்குங் கலைசையே—பற்பலவெண்
ணூற்றந் துரத்தினார் தோன்றிக் கிடந்திமைக்கும்
பாற்றந் துரத்தினார் பற்று.

கல் பம்முற ஆக்கும் - கற்கள் பம்முதலுற உண்டாக்கும். கற்பம் உறவு ஆக்கும் - சுவர்க்கத்தை (கற்பகதருவை) உறவாக்கிக்கொள்ளும். தோற்றம்

துரத்தினர் - பிறவியை நீக்கினவர். பால் தந்து உரத்தினர் - வெண்மையுள்ள உபவீதமணிந்த மார்பையுடையவர். (ருஉ)

மாப்பொலிந்த வீகையரு மைந்தருநன் மாதவருங்
காப்பணியாக் கொள்ளுங் கலைசையே—தீப்பிறங்கு
மாலாழி யீந்தான்முன் மாலினுக்குப் பாலனுக்குப்
பாலாழி யீந்தான் பதி.

காப் பணியாக் கொள்ளும்-கற்பகச்சோலையை ஏவலாகக்கொள்ளும். காப்பு அணியாக் கொள்ளும்-கடகத்தை அழகாகக்கொள்ளும். காப்பு அணியாக்கொள்ளும் - வீபூதியை ஆபரணமாகக்கொள்ளும். மால் ஆழி - பெரியசக்கரத்தை. பாலனுக்கு - உபமன்னிய முனிக்கு. பால் ஆழி - பாற்கடல். முன்னிரண்டடியில் முப்பொருள்வருதல் காண்க. (ருந)

தந்திடையார் தோய்தடமுந் தாவுமிள வாளைகளுங்
கந்தித் தலைசேர் கலைசையே—வந்திதரும்
பிட்டுக் கலந்தார் பிராட்டிகழுத் திற்றொடைய
லிட்டுக் கலந்தா ரிடம்.

கந்தித்து அலைசேர் - பரிமளித்து அலைகள் சேர்கின்ற. கந்தித் தலை சேர்-கமுகின் உச்சியிலே சேர்கின்ற. வந்திதரும் பிட்டுக்கு அலந்தார் - வந்தியென்பவள் கொடுக்கும் பிட்டுக்கு ஆசையுற்றவர். தொடையல் இட்டுக் கலந்தார்-மாலையிட்டுச் சேர்ந்தவர். (ருச)

அங்கனையார் கையி லணிமதிலிற் றேன்பணையிற்
கங்கணமண் டுஞ்சீர்க் கலைசையே—பொங்கு
மிருபதத்த னையவரைக் கீழிருத்தி யின்பந்
தருபதத்த னையன் றலம்.

கங்கணம் அண்டும் - கடகம்பொருந்தும். கம் கணம் அண்டும் - மேகக்கூட்டங்கள் சேரும். கங்கு அண மண்டும் - வரம்பைப்பொருந்த நிறையும். இருபது அத்தன் நைய வரைக் கீழ் - இருபதுகையையுடைய இராவணன் நையும்படி கைலைமலையடியில். முன்னிரண்டடியில் முப்பொருள்வருதல் காண்க. (ருரு)

சூழுமிளங் காவுஞ் சுரிகுழலார் சிற்றிடையுங்
காழகமுற் றேர்கொள் கலைசையே—தாழும்
பவத்துயரப் போக்கினர் பாகுரு தென்னைச்
சிவத்துயரப் போக்கினர் சேர்வு.

காழ் அகம் முற்று - வயிரத்தை உள்ளே முதிர்தலால். முற்று - முதிர்தல். காழகம் உற்று - புடவையைப்பொருந்தி. பவம் துயரம் போக்கினர் பால் உருது- பாவமாகிய துன்பவழியினரிடத்துப் பொருந்தாது. போக்கு - வழி; பிங்கல நிகண்டிற் காண்க. சிவத்து உயரப் போக்கினர் - நன்மையி லுயர்ச்சியடையச் செலுத்தினவர். (நிசு)

தேசிலகு மாவணமுஞ் செம்மைநடு வோர்மொழியுங்
காசினியா யஞ்சேர் கலைசையே—மூசியனை
ஒட்டுஞ் சடைவிரித்தா ரோங்கிவரு நீர்புகுதக்
கட்டுஞ் சடைவிரித்தார் காப்பு.

காசினி ஆயம் சேர்-பூமியிலுள்ளமாதராடவர்கள் கூட்டங்கள் அடைகின்ற. ஆயம்-கூட்டம். காசு இல் நியாயம் சேர்-குற்றமில்லாத நீதிபொருந்துகின்ற. மூசி-மொய்த்து. சடைவு இரித்தார்-மனத்தளர்ச்சியைக் கெடுத்தார். (நிஎ)

பூண்டாங்கு காளையரும் பொற்கோயின் மங்கையருங்
காண்டீப மேந்துங் கலைசையே—ஆண்டிரவி
பற்றகர மாட்டினர் பன்னகத்தைக் தாமரைபோ
லுற்றகர மாட்டின ரூர்.

காண்டீபம்-வில். காண் தீபம்-காணப்படும் விளக்கு. ஆண்டு இரவி பல் தகர மாட்டினர்-(தக்கன்யாகஞ்செய்த)அவ்விடத்திற் சூரியன்பல்லைத் தகரும்படி அடித்தார். பன்னகம்-பாம்பு. கரம் ஆட்டினர்-கையில்வைத்து ஆட்டினவர். ()

ஞானமுடை யோருலகை நற்சிறுமி மார்குழலைக்
கானலெனக் காணுங் கலைசையே—மானமருஞ்
செங்க மலக்கரத்தார் தீரா தெனையழுத்தும்
பங்க மலக்கரத்தார் பற்று.

கானலென - பேய்த்தேர்போல நிலையில்லாததென. கான் அல் என - இருட்காடென. பங்கம் மலக்கு அரத்தார் - பழுதாகிய மலத்துக்குச் சேதிக்கும் அரமாயிருப்பவர். (நிகூ)

வாரியளிப் போர்கமு மாதருங்கோங் கும்பூவிற்
காரிகைக்கொப் பென்னுங் கலைசையே—ஆரியனுய்க்
கல்லா லடியுற்றார் காண்போ யருச்சுனன்கை
வில்லா லடியுற்றார் வீடு.

பூவில் காரி கைக்கு ஒப்பு - பூமியிற் காரியென்னும் வள்ளலுடைய கரத்துக்கு உவமானம். பூவில் காரிகைக்கு ஒப்பு - பூவிலிருக்கும் பெண்ணாகிய

இலக்குமிக்கு உவமானம். கோங்கும் பூவில் காரிகைக் கொப்பு என்னும்-கோங்கு மலரும் பொலிவையும் ஒளியையும் அழகையுமுடைய கொப்பாகிய ஆபரணமென்றும் சொல்லப்படும். கொப்பு-மாதர்காதணியினொன்று. கோங்கு ஆகுபெயராய்ப் பூவை உணர்த்திற்று. ஆரியன்-ஆசாரியன். கல்லால்-(கைலையிலிருக்கின்ற) ஒருவகை ஆலமரம்; இது சுத்தமாயாசொரூபமென்பர். முன்னிரண்டடியில் முப்பொருள்வருதல் காண்க. (சுo)

செல்லோதி யார்காற் சிலம்புமவர் தோய்தடமுங்
கல்லோல மாறுக் கலைசையே—பொல்லேன்
அரந்தைக்கோ டீரத்தா னருள்வைத் தாண்ட
கரந்தைக்கோ டீரத்தான் காப்பு.

கல் ஓலம் ஆறு-உள்ளிட்ட பரலின்சத்தம் தணியாத. கல்லோலம் மாறு-திரைகள் தவிராத. அரந்தைக்கோள் தீர-துன்பமாகிய இடையூறு நீங்க. கரந்தைக் கோடீரத்தான்-கரந்தைப்பூவையணிந்த சடையையுடையவன். (சுக)

பூண்டகழற் காளையரும் பூந்தடத்திற் பூவையருங்
காண்டமுகந் தேறுங் கலைசையே—நீண்டசடைக்
கிந்துவளை விற்றா ரெடுத்தணிந்தார் கூடலிலே
வந்துவளை விற்றார் மனை.

காண்டம் உகந்து ஏறும்-குதிரையை மகிழ்ந்து இவரும். இவ்வாறன்றிக் காண்டம் முகம் தேறும் எனப் பிரித்து அம்பிடத்துத் துணிவுகொள்ளு மென்பர். காண்டம் முகந்து ஏறும்-நீரை வாரிக் கரையேறும். இந்து வளை வில் தார்-சந்திரனாகிய வளைவையும் ஒளியையுமுடைய மாலையை. கூடல்-மதுரை. வளை-வளையல். (சுஉ)

சிட்டமுறு யோகியருஞ் செய்யுளல வன்பெடையுங்
கட்டளையி னாடுங் கலைசையே—எட்டுருவாய்த்
தோய்ந்த வருக்கொளியார் சுற்றைம் பொறிவழிவிட்
டோய்ந்த வருக்கொளியா ரூர்.

சிட்டம்-பெருமை. கட்டளையில் நாடும்-நியமத்தில் விரும்பும். செய்-வயல். அலவன்-ஆண்ஞெண்டு. கட்டு அளையின் ஆடும்-கட்டுகின்ற வளையிலே கூடியிருக்கும். எட்டு உரு ஆய்த் தோய்ந்த அருக்கு ஒளியார்-அட்டமூர்த்தமாகிப்பொருந்திய அருமையாகிய ஒளியாயுள்ளவர். அருக்கு-அருமை; தமிழ்ச் சொல்லகராதிபிற் காண்க. ஒளியார்-மறையாதவர். அட்டமூர்த்தம்-பஞ்சபூதம், சூரியன், சந்திரன், ஆன்மா; சூடாமணிநிகண்டு கஉ ஆவதிற் காண்க. ()

தேற்றுச் சிறுரினமூந் தேம்பொழிலு மல்குசிறு
காற்றேர் கடாவுங் கலைசையே—போற்றியன்போ
டேகுவல யத்தா ரிறைஞ்சும் படப்பாந்தள்
வாகுவல யத்தார் மனை.

சிறு கால் தேர் கடாவும்-சிறிய உருளையையுடைய சிறுதேரைச் செலுத்தும். சிறு காற்று எர்கள் தாவும்-தென்றல் அழகுகள் (பொருந்தத்) தாவிச் செல்லும். குவலயத்தார் - பூமியிலுள்ளவர். பாந்தள் - பாம்பு. தாவுதல் பலவிதமாதலால் அழகும் பலவாயினபோலும். (௬௪)

ஆயச் சிறார்படமு மார்க்குங் கடாசலமுங்
காயத் திரியுங் கலைசையே—நேயமுடன்
பைத்த பதஞ்சலியார் பார்த்துருகப் பொற்பொதுவில்
வைத்த பதஞ்சலியார் வாழ்வு.

காயத்து இரியும்-ஆகாயத்திலோடும். காயத் திரியும்-பகைவரைக்கொல்ல உலவும். பைத்த பதஞ்சலியார்-விரிந்தபதஞ்சலிமுனிவர். வைத்த-ஆடவைத்த. ()

ஒன்றுமற்றோ ரான்முலையு முண்மைநெறி கண்டோருங்
கன்றுமறந் தீர்க்குங் கலைசையே—கொன்றைமுடிக்
கங்கா தரனார் கடையேன் கவியுவக்கும்
அங்கா தரனு ரகம்.

ஒன்றும் மற்றோர் ஆன் முலையும் - பொருந்துகின்ற வேறொரு பசுவின் முலையையும். கன்று மறந்து ஈர்க்கும்-கன்றானது மறந்து (சுவைக்க) இழுக்கும். கன்று மறம் தீர்க்கும்-கோபிக்கின்ற பாவத்தை நீக்கும். கங்காதரனார்-கங்கையைத் தரித்தவர். அம் காது-அழகிய செவி. கன்றுதல்-மிகுதலுமாம். (௬௬)

வாளரவ வல்குனல்லார் வாள்விழியு மாலயமுங்
காளமியம் புஞ்சீர்க் கலைசையே—நீள்வீணைக்
கஞ்சக் கரத்தான் கடும்பிறவி வேரறுக்கும்
அஞ்சக் கரத்தா னகம்.

காளம் இயம்பும் - நஞ்சுபோலச் சொல்லும். காளம் இயம்பும் - சின்ன மொலிக்கும். கஞ்சம்-தாமரை. அஞ்சு அக்கரத்தான்-பஞ்சாக்கரமந்திரமுடையவன். (௬௭)

உத்தமர்தேர் நூனெறியு மொள்ளொளிசேர் நித்திலமுங்
கத்தங் கொழிக்குங் கலைசையே—தத்தருவி
உற்றவரை யாள்வா ருறுதனங்க டோய்வரவா
அற்றரை யாள்வா ரகம்.

கத்து அங்கு ஒழிக்கும் - பிதற்றுதலை அங்கே கெடுக்கும். கத்து அம் கொழிக்கும்-ஒலிக்கின்ற நீரானது (கரையில்) ஒதுக்கும். வரையாள் வார் உறு தனங்கள் தோய்வர்-மலைமகளாகிய உமாதேவியின் கச்சுற்றகொங்கைகளைக் கலப்பவர். (சுஅ)

பல்வகைநூ லாய்ந்தவரும் பார்த்திவர்சூட் டும்முடியுங்
கல்விரவி யேயுங் கலைசையே—வல்வினையால்
இட்ட தளையுடையா ரெண்ணத் தினுக்கரியார்
பட்ட தளையுடையார் பற்று.

கல்வி ரவி ஏயும்-கல்வியினாற் சூரியனையொக்கும். கல் விரவி ஏயும்-இரத்தினக்கற்கள் கலந்துபொருந்தியிருக்கும். தளையுடையார் எண்ணத்தினுக்கு அரியார்-பந்தத்தையுடையவர் நினைவிற்கு அருமையாயிருப்பவர். பட்டு அதளை யுடையார்-பட்டாகத் தோலையுடையார். (சுகூ)

நற்றாள நீர்ச்செறுவு நாவலர்கண் முத்தமிழுங்
கற்றையவை யேறுங் கலைசையே—குற்றமில்சீர்
ஆவினஞ் சாடினா ரன்பிறக்கன் வேள்விபுக்க
தேவினஞ் சாடினார் சேர்வு.

செறு-வயல். கற்றைய வை ஏறும்-தொகுதியாகிய வைக்கோல் அதிகமாகும். கற்று ஐ அவை ஏறும்-கற்கப்பட்டு அழகிய சபையில் உயர்வுறும். ஆவின் அஞ்சு ஆடினார்-பசுவிலுண்டான பஞ்சகவ்வியத்தை மூழ்கினவர். தே இனம்-தேவர்கூட்டங்கள். சாடினார்-அடித்தவர். (எ0)

செவ்வைமனத் தன்பினருந் தேன்மடுவிற் செங்கயலுங்
கவ்வையலைத் துள்ளுங் கலைசையே—கொவ்வைவாய்த்
துப்பிதழி வாமத்தார் சுற்றுசடி லத்தினறை
பப்பிதழி வாமத்தார் பற்று.

கவ்வை அலைத்து உள்ளும் - துன்பத்தைக்கெடுத்து நினைக்கும். கவ்வை அலைத் துள்ளும்-ஒலியையுடைய திரையிற் குதிக்கும். துப்பு இதழி வாமத்தார்-பவளம்போன்ற இதழ்களையுடையவளாகிய உமாதேவியை இடப்பாகத்துள்ளவர். நறை பப்பு இதழி வாமத் தார்-தேன்பரவிய கொன்றைமாலையையுடையவர். ()

சீற்றமுறு வாட்கையருஞ் செங்குமுதத் தேனளியுங்
காத்திரவில் வாங்குங் கலைசையே—நாத்திகமில்
நீதிக் கருத்திஞர் நெஞ்சுகந்தார் கற்கரிக்கன்
றோதிக் கருத்திஞ ரூர்.

காத்திரம் வில் வாங்கும் - கனமுடைய வில்லை வளைக்கும். காத்து இரா வில் வாங்கும்-காத்துநின்று இராக்காலத்திற் கொள்ளும். நாத்திகம் இல்-இல்லை யென்பதில்லாத; உண்டென்று கொள்கின்ற என்பது கருத்து. கற் கரிக்கு-கல்லானைக்கு. இக்கு-கரும்பு. கல்லானைக்குக் கரும்புதந்ததைத் திருவிளையாடற் புராணத்தி லறிக. (எஉ)

தேம்பா விசையினருஞ் செய்ந்நீல மாளிகையுங்
காம்போதி யோதுங் கலைசையே—கூம்பா
மருப்பச் சிலையான் மகிழ்ந்திடினு மேற்கும்
பொருப்பச் சிலையான் புரம்.

காம்போதி ஓதும்-காம்போதி என்னும் இராகத்தைப் படிக்கும். காம்பு ஓதி ஓதும் - மூங்கிலையுடைய மலைக்குச் சமஞ்சொல்லப்படும். கூம்பா மருப் பச்சிலை யான் மகிழ்ந்து இடினும்-குவியாத வாசனையுடைய பச்சிலையை நான் மகிழ்ந்திட் டாலும். பொருப்பு அச் சிலையான் - மலையை அந்த வில்லாகவுடையவன். (எங)

வஞ்சியிளம் பேதையரு மாரு திராப்பொழுதுங்
கஞ்சனையைப் பார்க்குங் கலைசையே—நெஞ்சம்
உருக வழுத்துவா ரும்பரின்பத் தேனைப்
பருக வழுத்துவார் பற்று.

கஞ்சனையைப் பார்க்கும்-கண்ணுடியைப் பார்த்திருக்கும். கஞ்சம் நையைப் பார்க்கும்-தாமரைப்பூ நைதலைப் பார்த்திருக்கும். நை முதனிலைத்தொழிற்பெயர். நைதலாவது ஈண்டுக் குவிந்து வாடுத லென்க. உம்பர் இன்பத் தேனை-மேலான சிவானந்தமாகிய தேனை. அழுத்துவார் - பதிப்பார். (எச)

வண்டோடை யம்புயமு மாவீர ரம்புயமுங்
கண்டுதி யாருங் கலைசையே—பண்டோர்கோ
லங்கூ விளத்தா னழற்பிழம்பாய் நீண்டெழுந்த
பைங்கூ விளத்தான் பதி.

கண்டு ஊதி ஆரும் - பார்த்து மூக்கால் உழுதிரைந்து தேனை யுண்ணும். கண்டுதி ஆரும்-(போரின்மையால்) தினவுதங்கும். கோலம் கூவிள்ள-பன்றிவடிவ

மாகிய திருமால் பூமியைப் பிளக்க. விள்ள என்பது விளவென விகாரமாயிற்று. பைங் கூவிளத்தான்-பசிய வில்வத்தையுடையவன். (எடு)

தண்டாச் சவுரியர்க டாக்குமடி யாருமுறு
கண்டீர வங்கூர் கலைசையே—திண்டேர்
அருக்கரைக்கண் டொட்டா ரறிவிலா நெஞ்சத்
தருக்கரைக்கண் டொட்டார் தலம்.

சவுரியர்-வீரர், தாக்கு-வேகமும், வலியுமாம். உறு கண்டீரவம் கூர்-மிக்க சிங்கத்தைப்போல மிகுந்திருக்கின்ற. உறுகண் தீர அங்கு ஊர்-துன்பம் நீங்க அங்கே செல்கின்ற. அருக்கர் ஐக்கண் தொட்டார்-(தக்கன்யாகத்தில்) சூரிய ருடைய அழகியகண்ணைத் தோண்டினவர். தருக்கரைக்கண்டு ஒட்டார்-செருக் கரைநோக்கிப் பொருந்தாதவர். (எசு)

புட்குலமு மாதரைவேள் போல்வாரு மாலையினிற்
கட்சிவந்து கூடுங் கலைசையே—வெட்சிமலர்
அந்தார்க் குமரனு ரையரா வென்றிமையோர்
வந்தார்க் குமரனுர் வாழ்வு.

கட்சி வந்து கூடும் - கூட்டினிடத்து வந்து சேரும். கண் சிவந்து கூடும் - கண் சிவக்கப்பெற்றுப் புணரும். வெட்சிமலர் அம் தார்க் குமரனுர் ஐயர் - வெட்சிப்பூவாலாகிய அழகிய மாலையுடைய முருகனுக்குத் தந்தையானவர். (எஎ)

வீட்டினெறி தோரும் வேதியர்வேள் வித்தழலுங்
காட்டத் தெரியுங் கலைசையே—கூட்டரணம்
நீரு வசித்தார்நன் னேசமிலே னெஞ்சினிற்றேன்
ஊரு வசித்தா ருழை.

காட்டத் தெரியும் - ஆசாரியன் காண்பிக்க அந்நெறியைத் தெரிந்துகொள் ளும். காட்டத்து எரியும் - ஓமவிறகினு லெரியும். அரணம் நீரு அசித்தார் - திரிபுரக்கோட்டையை நீருகச் சிரித்தவர். தேன் ஊரு வசித்தார் - தேன் போல ஊறித் தங்கினவர். (எஅ)

கோமளமின் னார்முலைக்குங் கோலவத னத்தினுக்குங்
காமர் மதிவீழ் கலைசையே—நாமரையா
மத்தி னடிப்பார் மதியைக் கலைகெடக்கோ
பத்தி னடிப்பார் பதி.

காமர்மதி வீழ் - மன்மதனுடைய புத்தியும் தாழ்கின்ற. காமர் மதி வீழ் - அழகிய சந்திரன் விரும்புகின்ற. நாம் அரையாமத்தில் நடிப்பார் - அச்சம்

தங்கும் அரையிருளில்நடனஞ்செய்வார். மதியைக் கலைகெடக்கோபத்தின் அடிப்பார் - (தக்கன்யாகத்தில்) சந்திரனைக் கலைகெடும்படி கோபத்தினலடிப்பவர். ()

வார்முலையார் நன்னுதற்கும் வாவிவிடா யுற்றவர்க்குங்
கார்முகந்துண் ணென்னுங் கலைசையே—நார்மிருத்த
உள்ளத் திருப்பின ருள்ளேன்றன் கன்மனத்தை
மெள்ளத் திருப்பினர் வீடு.

கார்முகம் துண்ணென்னும் - வில்லானது அஞ்சும். துண்ணெனல்-அச்சக் குறிப்பு. வாவி-தடாகமானது. விடாயுற்றவர்-தாகமுற்றவர். கார் முகந்து உண் என்னும் - நீரை மொண்டு உண் என்றுசொல்லும்; கூறுதலைக் கூறியதாக வுரைத்தாரென்க. நார்-அன்பு. உள்ளத்து இருப்பினர் - மனத்தில் இருத்தலை யுடையார். மெள்ள-மெல்ல; இலேசாக என்பது கருத்து. (அ0)

நூலஞ்சு நுண்ணிடையார் நோக்கமுமம் போருகமுங்
காலஞ்ச மின்னுங் கலைசையே—கோலமுடி
வைத்தகம லத்தார் வருங்கூற்றை யஞ்ஞான்று
தைத்தகம லத்தார் தலம்.

கால் அஞ்ச மின்னும்-இயமனும் அஞ்சும்படி பிரகாசிக்கும். கால் அஞ்சம் மின்னும்-தன்னிடத்தில் அன்னம் பிரகாசிக்கப்பெறும். கோலம் முடிவைத்த கமலத்தார்-அழகியசடையில்வைக்கப்பட்ட கங்கைநீரையுடையார். அஞ்ஞான்று உதைத்த கமலத்தார்-அக்காலத்து உதைத்த கமலமாகிய பாதத்தையுடையவர். ()

மைம்மாறு சிந்தையரு மாறு விதாணருங்
கைம்மாறு கொள்ளாக் கலைசையே—வெம்மான்றோல்
வீக்கு மரையன் விளிபடவென் சஞ்சிதத்தைப்
போக்கு மரையன் புரம்.

கை மாறுகொள்ளா-ஒழுக்கம் மாறுபடாத. கைம்மாறு கொள்ளா-பிரதியுபகாரத்தை ஏற்றுக்கொள்ளாத. வீக்கும் அரையன்-கட்டுந்திருவரையையுடையவன். விளிபட-கெட. என் சஞ்சிதத்தைப் போக்கும் அரையன் - என்னுடைய முன்னுள்ள வினையைக் கெடுக்கும் அரசன். (அஉ)

பட்டாரு மிட்டிடையார் பார்வையிலுங் கோதையிலுங்
கட்டா ரிவருங் கலைசையே—எட்டான
ஆசை யுடுக்கையா ரண்டங் கிடுகிடுக்கும்
ஓசை யுடுக்கையா ரூர்.

இட்டு - அற்பம். கட்டாரி வரும்-வாளைப்போலத் தோன்றும். கோதை-கூந்தல். கள் தார் இவரும்-கள்ளையுடைய மாலை ஏறியிருக்கும். ஆசை உடுக்கையார் - திக்காடையையுடையவர். உடுக்கையார் - உடுக்கென்னும் வாச்சியத்தையுடையவர். (அங)

அத்தார் மகவினத்தை யாட்டின் குழவைநன்கு
கைத்தாய ரேந்துங் கலைசையே—கொத்தாருஞ்
சீத வடம்புடையார் தேவி சிவகாமி
மாத வடம்புடையார் வாழ்வு.

அத் தார்-அந்த மாலை. கைத்தாயர் ஏந்தும்-செவிலித்தாயார் கையேந்தும். நன்கு உகைத்து ஆயர் ஏந்தும்-நன்குசெலுத்தி இடையர் தாங்கும். சீதம் அடம்பு உடையார் - குளிர்ந்த அடம்பமலரை அணிதலுடையவர். அடம்பமலரையணிந்திருக்கிறாரென்பதைப் பெரியபுராணம் ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணத்தில் கoக-ஆவது கவியிற் காண்க. தம் புடையார்-தம்பக்கமாகவுள்ளவர்.

மாதர் விழிவேலும் வண்ணப் பசுங்கிளியுங்
காதை யுரைக்குங் கலைசையே—ஓதிடும்பேய்
மண்டுபுறங் காட்டினார் வாணனறக் கண்ணனமர்
கண்டுபுறங் காட்டினார் காப்பு.

காதை உரைக்கும்-காதினைத் தேய்க்கும். காதை உரைக்கும் - கதையினைச் சொல்லும். புறங்காட்டினார்-சுடுகாட்டிலாடினவர். வாணன் அறக் கண்ணன் அமர் கண்டு புறங்காட்டினார்-வாணாசுரன் இறக்கக் கண்ணன் செய்யத்தொடங்கிய போரைக்கண்டு பின்னிட்டவர். எதற்காகப் புறங்காட்டினாரெனில்? முற்காலத்திற் கண்ணன் மைநாகமலையிற் றவஞ்செய்து சிவபிரான் தனக்குத்தோற்றுப் போகும்படி வரம்பெற்றதைப் பொய்யாமற் பாதுகாத்தற்பொருட்டென்க; காஞ்சிப்புராணம் வாணீசப்படலத்தில் எ-வது கவியிற் காண்க. (அரு)

அஞ்சநடை யார்மொழியி லையிளைஞர் மெய்யிலுருக்
கஞ்சுகஞ்சே ரின்பக் கலைசையே—அஞ்சக்
கிளத்தலை யோட்டினார் கேதமற நாயே
னுளத்தலை யோட்டினா ரூர்.

உருக்கம் சுகம் சேர் - அன்புஞ் சுகமுஞ் சேர்கின்ற. உருக்கம் - இரக்கமுமாம். உருக் கஞ்சுகம் சேர்-அழகிய சட்டை சேர்ந்திருக்கின்ற. அஞ்சக் கிள் அத்தலை யோட்டினார் - அஞ்சும்படி கிள்ளப்பட்ட அந்தப் பிரமன்றலையோட்டையுடையவர். கேதம் அற-துன்பம் நீங்க. அலை ஓட்டினார்-அலைதலை நீக்கினவர். அலைதல்-வருந்தித்திரிதல். (அசு)

வாணுதலார் பூணுமவர் மையலுறப் பட்டோருங்
காணத் தணியுங் கலைசையே—ஏணிவளர்
கையா னடத்தினன் கங்காளன் சங்கரன்வெண்
மையா னடத்தினன் வாழ்வு.

காணத்து அணியும் - பொற்காசினை லணியும். காணத் தணியும் - பார்க்க அடங்கும். ஏணி - மான். நடத்தினன் - நடனத்தையுடையவன். கங்காளன்- முழுவெலும்பையணிந்தவன். சங்கரன் - சுகத்தைச்செய்பவன். வெண்மை ஆன் நடத்தினன் - வெண்ணிறமுள்ள இடபத்தை நடத்தினவன். (அஎ)

மாணிலைமை வாய்மையரும் வாய்ந்தவிழா விண்ணவருங்
காணியவந் தோயாக் கலைசையே— ஆணவமாம்
பாம்புயங்க வாட்டினர் பைம்பொற் பொதுவரங்கின்
மேம்புயங்க வாட்டினர் வீடு.

காணி அவம் தோயா - காணிஅளவாயினும் தீமை பொருந்தப்பெருத. விழாவை என ஐயுருபு விரித்துரைக்க. காணிய வந்து ஓயா - காணுதற்கு வந்து ஒய்தலில்லாத. ஆணவம் ஆம் பாம்பு உயங்க வாட்டினர் - ஆணவமலமாகிய பாம்பு வருந்த வாட்டினவர். மேவும் புயங்க ஆட்டினர் - பொருந்திய புயங்க மென்னும் கூத்தையுடையவர். மேவும் என்பது மேம் என்றானது விகாரம். ()

வேரிமலர்ப் பண்ணையினு மெய்ச்செல்வர் மந்திரமுங்
காரணக்கூ ழோங்குங் கலைசையே—வீரமெல்லாம்
மாளத் திகிரியான் மார்பொருவ னைப்பிளந்த
காளத் திகிரியான் காப்பு.

கார் அண்ணக் கூழ் ஓங்கும் - மேகத்தை அண்ணும்படி பயிர்கள் வளரும். மந்திரம் - வீடு. காரணம் கூழ் ஓங்கும் - அறத்திற்கும் இன்பத்திற்குங் காரண மாகிய பொன் அதிகப்படும். கூழ் என்பதற்கு உணவு எனவுங் கூறுவர். திகிரி யால் - சக்கராயுதத்தால். ஒருவனை - சலந்தராசுரன் என்கிற ஒருவனை. காளத்தி கிரி - காளத்தி மலை. சலந்தரனைக்கொன்ற கதையைக் காஞ்சிப்புராணச் சலந்தரீசப்படலத்திலறிக.

தூக்கணங்கன் ஞர்திருக்குந் தூக்குரைக்கு மாக்கணமுங்
காக்கணங்க ளாருங் கலைசையே—தாக்கணவும்
ஆதிவரா கத்தா னளப்பரிய சேவடியான்
மாதிவரா கத்தான் மனை.

தூக்கு - முன்னது உயர்ச்சி, பின்னது பாட்டு. இருக்கு - கண். மா-வண்டு. காக்கணங்கள் ஆரும் - கருவிளமலர்களை யொக்கும். காக்கண் அம் கள் ஆரும். சோலையினிடத்து அழகிய தேனை யுண்ணும். ஆதி வராகத்தான்-திருமால். மாது இவர் ஆகத்தான் - உமாதேவியாகியமாது பொருந்திய சரீரமுடையவன். (கூ0)

ஆனகரு மேதிகளு மாயுமிசை யோருமிக்குக்
கான முழக்குங் கலைசையே—மானமறப்
பற்றிப் பாசினர் பாசத் தளைகளையும்
வெற்றிப் பரசினர் வீடு.

இக்குக்கானம் உழக்கும் - கருப்பங்காட்டைக் கலக்கி மிதிக்கும். மிக்குக் கானம் முழக்கும் - மிகுந்த இசைப்பாட்டினை முழக்கும். மானம் அறப் பற்றிப் பரசினர் பாசத் தளை களையும் வெற்றி பரசினர்-அபிமானம்நீங்க அன்புபொருந் தித் துதித்தவருடைய பாசபந்தத்தைநீக்கும் வெற்றிபொருந்திய மழுவாயுதத்தையுடையவர். (கூக)

செம்மலர்ப்பூம் பொய்கைகளுந் தேம்பொழிலிற் கொண்மூவுங்
கம்மிக் குலாவுங் கலைசையே—தம்மையறி
தொண்ட ருளக்கமலர் தோத்திரஞ்செய் வாரன்பு
கண்ட ருளக்கமலர் காப்பு.

கம் மிக்கு உலாவும்-நீர் மிகுந்து அசையும். கம்மிக் குலாவும்-மூடி விளையும். கண்டு அருள் அக்கு அமலர் - பார்த்து அருள்கின்ற கண்ணையுடைய நிர்மலரா யுள்ளவர். (கூஉ)

திங்களுத லார்குழலீற் செங்தேன் கழனியிற்சேர்
கங்கங் கறுக்குங் கலைசையே—கொங்கிமயக்
கொம்பா ரிடத்தினர் குண்டுவயிற் றக்குறுந்தாள்
வெம்பா ரிடத்தினர் வீடு.

கங்கம் கறுக்கும் - சீப்பானது கோபிக்கும். சீப்புப் பற்றியிழுத்தலை ஈண்டுக் கோபித்தலென்றார். கங்கு அங்கு அறுக்கும் - வரம்பை அங்கே சேதிக்கும். கொங்கு - வாசனை. இமயக்கொம்பு ஆர் இடத்தினர் - இமயமலையிற்பிறந்த பூங்கொம்பாகியஉமாதேவி பொருந்திய இடப்பாகமுடையவர். குண்டு - ஆழம். பாரிடத்தினர் - பூதப்படையையுடையார். (கூங)

எட்டுறு போகத்தாரு மீர்ங்குமுத முஞ்செய்ய
கட்டிலணை யிற்சேர் கலைசையே—உட்டியா
னத்துவ சத்தினர் நாயேனை யாண்டவிட
பத்துவ சத்தினர் பற்று.

எட்டுறு போகம் - எட்டாகவுற்ற வின்பம். அவை அணிகலம், ஆடை, தாம்பூலம், பரிமளம், சங்கீதம், பூவமளி, பெண், போசனம் என்பன. கட்டில் அணையில் சேர் - கட்டிலில்இட்ட மெத்தையிற் கூடுகின்ற. செய் அகட்டில் அணையில் சேர் - வயலினடுவிலும் வரம்பிலும் பொருந்தியிருக்கின்ற. உள் தியானத்து வசத்தினர் - மனதினகத்துச்செய்யுந் தியானவசமாயிருப்பவர். இடபத்துவசத்தினர் - இடபக்கொடியையுடையவர். (கூச)

மைப்பறழ்க்குக் கோவலரு மங்கையர்சொற் குக்குயிலுங்
கப்பங் கொடுக்குங் கலைசையே—துப்புறுங்கூர்
மத்தோ டணிவார் வளையிழைத்துச் சேர்த்ததவ
ளத்தோ டணிவா ரகம்.

மைப்பறழ் - ஆட்டுக்குட்டி, கோவலர் - இடையர். கப்பு அங்கு ஒடுக்கும்-மரக்கிளைகளை (இலையையருந்தும்படி) அங்கே (வளைத்துக்) கொடுக்கும். கப்பம் கொடுக்கும் - திறைகொடுக்கும். துப்பு - வலி. கூர்மத்து ஓடு அணி வார் வளை இழைத்துச் சேர்த்த தவளத் தோடு அணிவார் - மாலவதாரமாகியஆமையோட்டையும், அழகிய நேர்மையுள்ள சங்கை இழைத்துச் சேர்க்கப்பட்ட வெண்மையுடைய தோட்டையும் அணிபவர். இழைத்தல் - சீவல். (கூரு)

சுந்தாஞ்சே ராடவருஞ் சூதுமுலை யார்குழலுங்
கந்தனையே யொக்குங் கலைசையே—பந்தஞ்
சிதையத் துதியார் திறங்கண் டவர்த
மிதையத் துதியா ரிடம்.

கந்தனையே ஒக்கும் - முருகக்கடவுளையே நிகர்க்கும். கம் தன ஒக்கும் - மேகத்தையொக்கும். ஏ அசை. சிதையத் துதியார்திறம் கண்டு அவர்தம் இதையத்து உதியார் - சிதையும்படி துதிசெய்யாதவர்தன்மைகண்டு அவருடைய மனத்திலே தோன்றாதவர். (கூசு)

எண்ணேற்ற வுத்தமரு மெண்டிசையுங் காரிகையார்
கண்ணோட்டஞ் செய்யுங் கலைசையே—பண்ணார்
சுருதிமா வாக்கினர் சுற்றுநரி யெல்லாங்
குருதிமா வாக்கினர் காப்பு.

எண்-ஆராய்ச்சி. கண்ணோட்டம் - தாட்சண்ணியம். கண் ஓட்டம் - கண் ஓடுதல். ஓடுதலாவது ஒரு நிலையினின்றுபாராது விரைந்துசெல்லுதலாம். சுருதி மா வாக்கினர் - வேத மகாவாக்கியத்தையுடையவர். மா ஆக்கினர்-குதிரையாகச் செய்தவர். (கூஎ)

பம்புபெரும் பாக்கியரும் பஞ்சவனக் கிள்ளையும்பூக்
கம்பலத்தி லேறுங் கலைசையே—உம்பரெலாம்
வந்தித்த வக்கரையார் மாதுசிவ காமிபங்கர்
பந்தித்த வக்கரையார் பற்று.

பூக் கம்பலத்தி லேறும்-அழகையுடைய கம்பளத்தில் ஏறியிருக்கும். பூக்கம் பலத்தில் ஏறும் - கமுகம்பழத்திலேறியிருக்கும். வக்கரையார் - திருவக் கரையென்னுந் தலத்தையுடையவர். பந்தித்த அக்கு அரையார் - வரிசையாகச் செய்யப்பட்ட சங்குமணியைக்கட்டிய திருவரையையுடையவர். (௯அ)

தண்டிகையே றுஞ்செல்வர் தம்மார்பு நன்மடமுங்
கண்டிகையா ரங்கூர் கலைசையே—வண்டுளருந்
தண்டுளசித் தாமத்தன் றாரமா கப்புணர்ந்த
பண்டுளசித் தாமத்தன் பற்று.

கண் திகை ஆரம் கூர் - கண்திகைக்கும்படியான முத்துமாலை மிகுந்திருக் கின்ற. ஆரம் - பதக்கமுமாம். கண்டிகையார் அங்கு ஊர்-உருத்திராக்கமாலையை யுடைய அடியார்கள் அங்கே செல்லுகின்ற. கண்டிகை-உருத்திராக்கம்,தமிழ்ச் சொல்லகராதியிற் காண்க. தண் துளசித்தாமத்தன் தாரம் ஆகப் புணர்ந்த பண்டு உள சித்து ஆம் அத்தன்-குளிர்ச்சியையுடைய துளவமாலையையணிந்த திருமால் மனைவியாகச்சேர்ந்த பண்டேயுள்ள சித்துப்பொருளாகிய உயர்ந்தோன். (௯௯)

ஐவாய வேட்கை யகன்றவரு மாகதருங்
கைவாரஞ் செய்யுங் கலைசையே—மெய்வாழ்வு
நண்ணியபி ராமிதிரு நாடோறும் போற்றிடுஞ்சேற்
கண்ணியபி ராமிபங்கர் காப்பு.

ஐவாய வேட்கை - ஐவகையிந்திரியவாயிலாகவரு மாசை. கை வாரம் செய் யும் - ஒழுக்கமும் அன்பும் செய்கின்ற. மாகதர் - பாணர், இருந்தேத்துவோ ரென்பர் சிலப்பதிகாரவுரையில். கை வாரம் செய்யும் - முறையாக வார மென்னும் பாடலைப் பாடுதல்செய்யும். வாரமாவது சொல்லொழுக்கமும் இசை யொழுக்கமுமுடைய பாடலென்பர் சிலப்பதிகாரவுரையில். பிராமி - சரஸ்வதி. திரு-இலக்குமி, அபிராமி பங்கர்-அழகுடையவளாகிய உமாதேவியைப் பாதியி லுள்ளவர். (௧00)

வாழியதொட் டிக்கலையூர் வாழி சிவகங்கை
வாழி சிவகாம வல்லியெந்தாய்—வாழி
புகழ்ச்சிதம்ப ரேசரருள் போற்றுமவ ரன்பர்
மகிழ்ச்சியுடன் வாழி வளர்ந்து.

கலைசைச் சிலேடைவெண்பா

முற்றிற்று.